# மத்திய கிராம முன்னேற்றச் சங்கம்

கோண்டாவில் வடக்கு

கோண்டாவில்



# வெள்ளிவிழா மலர்

**12-02-1987**

" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு "

# ஜெனாட்டன்ஸ்



உயர் ரக உருக்குத் (Steel) தளபாட
உற்பத்தியின் முன்னோடிகள்.
புதிய அமைப்பில்
உறுதியும், உத்தரவாதமும்கொண்ட

- ❋ உங்கள் வீட்டுத் தளபாடங்கள்
- ❋ சாப்பாட்டுக் கதிரைகள்
- ❋ மேசைகள்
- ❋ ரீ. வி. ஸ்ராண்ட்கள்
- ❋ விருந்தைக் கதிரைகள்
- ❋ கட்டில்கள், செற்றிகள்

❋ நீண்டகால பாவனைக்கு நீடித்து உழைக்கக்கூடிய காரியாலய (OFFICE) தளபாடங்கள், வாடகைக் கதிரைகள், ஆஸ்பத்திரிக் கட்டில்கள் (HOSPITAL BEDS)

❋ இறக்குமதித் தரத்திலான விசேட உருவமைப்பில் உருவாக்கப் பட்ட சுழல் கதிரைகள் (REVOLVING CHAIRS)

வாடிக்கையாளர்களின் வசதியை முன்னிட்டு
எமது உற்பத்திப் பொருட்கள் அனைத்திலும் எமது சின்னம்
(JANARDENS) இடப்பட்டுள்ளது.

யாழ் நகரில் விற்பனை முகவர்களிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்

சகலவிதமான கட்டிடப் பொருட்களையும் சகாய விலையில்
பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம்

## ★ ஜெனாட்டன்ஸ் ஹாட்வெயர் ★

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# புலவர் வீடியோ
# PULAVAR VIDEO

❋ நவீன விஷன் மிக்ஷரில்


❋ நான்கு (4) கமராக்கள் பொருத்தி

❋ கைதேர்ந்த வீடியோ இயக்குநர்களைக் கொண்டு

❋ உங்கள் விருப்பத்திற்கேற்ப

❋ காலத்திற்குக்காலம் புதுமைகள் பல புகுத்தி

சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்துத் தருபவர்கள்




# புலவர் வீடியோ
# Pulavar Video

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

உரிமையாளர்

கே. பி. புலவர்

# தொழிற் பயிற்சிகள்

❊ **COMPUTER PROGRAMMING**

(BASIC LANGUAGE) (COBOL)

Radio Shack B. B. C., Commeder ஆகிய Computer களில் 60 மணித்தியாலத்துக்கு மேல் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 5 மாதம் முழுக்கட்டணம்: ரூபா 400/-

❊ **ரெலிவிஷன், வீடியோ டெக், றேடியோ றிப்பியறிங்**

சகல இன ரெலிவிஷன், டெக், றேடியோ மற்றும் எலெக்ரோனிக் கருவிகள் திருத்தும் முறை இரண்டு மாதச் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும். பயிற்சிக் காலம்: 4 மாதம் முழுக்கட்டணம்: ரூபா 400/-

❊ **எலக்ரிக்கல வயறிங்**

வீட்டு மின்சார வேலை, மின்சாரப் பொருட்கள் திருத்துதல், பயிற்சியளிக்கப்படும். பயிற்சிக் காலம்; 2 மாதம் முழுக்கட்டணம்: ரூபா250/-

❊ **வைண்டிங்**

STUDIES DETERMINED THE FUTURE

விபரத்திற்கு:

# Jaffna Technical Institute

52/1, ஸ்ரான்லி வீதி,
ரெயில்வேகடவையருகில்
யாழ்ப்பாணம்.

141, கண்டி வீதி,
யூனியன்பேக்கறியருகில்
சாவகச்சேரி.

தபாற்கந்தோர் வீதி,
தபாற்கந்தோர் அருகில்
நெல்லியடி, கரவெட்டி.

---

**A/L** விஞ்ஞானக் கல்விக்கு முதன்மை வகிக்கும் நிறுவனம்

✣ ✣ ✣

# நியூ மாஸ்ரர் இன்ஸ்ரிரியூட்
# NEW MASTER INSTITUTE

B. M. C. LANE, JAFFNA.

---

உங்கள் கட்டிட ஒப்பந்த வேலைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

❊ ❊ ❊

# சமக்கோன் ஸ்தாபனம்

(பிரபல கட்டிட ஒப்பந்தகாரர்)

165, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.



சீர்மேவு யாழ்ப்பாணம்

கோண்டாவில் நற்பதியில்

வாழும் உமையவளாம்

ஸ்ரீ சிவகாமியை

கோயிலோடு காலமெல்லாம்

கோபுரமும் காணவைத்தார்

கற்றவர்க்கோர் உள்ளொளியாம்

கற்பகமாம் சிவகாமியே

கல்லுதற்கோ அம்மா கல்லானாய்

காலடிக்கே அன்புமலர்

வணக்கம்

மாணவ உலகின் வைர ஏணி

# NIRU TUITION CENTRE
## KONDAVIL

கலை, வர்த்தகம், விஞ்ஞானம் ஆகிய வகுப்புக்கள்
தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப்படுகின்றன

O/L, 9, 8, 7, 6, 5 ஆண்டுகளுக்கான சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

விபரங்கட்கு:

# NIRU TUITION CENTRE

கோண்டாவில்

# கங்கா போட்டோ

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

கலர்ப் படங்கள், அடையாள அட்டைப் படங்கள், பாஸ்போட்,
திருமண வைபவம், பிறந்தநினக் கொண்டாட்டம்,
பூப்புனித நீராட்டு வைபவங்கள், பாடசாலை விழாக்கள்

மற்றும் சகல வைபவங்களுக்கும் படம் பிடித்துக் கொடுக்கப்படும்.

- வர்ணப்படம்
- நிலையமும் வெளிக்களமும்
- கடுகதி சேவை
- குறைந்த சலார்

தொடர்பு:

பொ. கங்காதரம்பிள்ளை
உரிமையாளரும் படப்பிடிப்பாளரும்

# ஆசியுரை

வட கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்ற சங்கத்தின் வெள்ளிவிழா ஆண்டினை நினைவு கூரும் வண்ணம் ஓர் சிறப்பு மலர் வெளியிடுவது பொருத்தமானதே. கஷ்டங்களுக்கு மத்தியிலும் நாம் வாழப் பழகிவிட்டோம். இக் கஷ்ட காலங்களிலே தான் இன ஒற்றுமை அவசியம் தேவை. கிராம முன்னேற்றச் சங்கங்கள் சிறந்த முறையிலே இயங்கி வருமேயானுல், மக்கள் ஒன்றுபட அவை பெரிதும் உதவும். இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட வட கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் பல அரிய சமூகப்பணிகளை ஆற்றி வந்துள்ளது. சிறு கைத்தொழில் நிலையம், பாலர் பாடசாலை போன்ற மக்களுக்கு பெரிதும் உதவும் அமைப்புக்களை அமைத்தும் மக்கள் அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளைச் செய்தும் பல பணிகள் செய்து வந்துள்ளது.

இக் கிராம முன்னேற்ற சங்கத்தை நடாத்தும் பொறுப்பாளர்களை இச் சந்தர்ப்பத்திலே பாராட்ட வேண்டும். இவர்களுடைய முயற்சிகள் மென்மேலும் பயனுற என் ஆசிகளைக் கூறுகிறேன். வெள்ளி விழா இனிதே நடைபெறவும், வெள்ளி விழாச் சிறப்பு மலர் நன்கு அமையவும், இறைவனை வேண்டி இவ் ஆசியுரையை வழங்குகிறேன்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன்
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

# வாழ்த்துரை

வட கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றசங்கம் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அப்பகுதி மக்களுக்கு அரிய பணிகள் ஆற்றிவருகிறது. வெள்ளி விழாவினைக் கொண்டாடும் இவ் வேளையிலே இந்நிலையத்தின் பணிகள் சிலவற்றை நினைத்து பாராட்டுவது பொருத்தமானதாகும். அப்பகுதியிலே வாழும் பெண்களின் நலனுக்காக ஓர் நெசவு நிலையம் அமைத்தும், பாலர் கல்விக்காக அக் கிராமத்திலே ஓர் பாலர் பாடசாலை ஆரம்பித்தும், மக்களின் சுகாதார நலன் பேணி வீட்டுக்கொரு மலசல கூடம் அமைத்தும், தண்ணீர்த்தாங்கி, மாலைநேரப் பாடசாலை போன்றன அமைத்தும் இச் சனசமூக நிலையம் ஆற்றிவந்துள்ள தொண்டுகள் மக்கள் சேவைகளேயாகும்.

சிறு துளி பெருவெள்ளம் ஆவதுபோல தமிழன் வாழும் பிரதேசங்களில் உள்ள இத்தகைய சிறிய நிறுவனங்கள் மூலமாக இன ஒற்றுமையினையும், சமூக வளர்ச்சியினையும், பண்பாட்டுப் பேணலையும் செவ்வனே ஏற்படுத்தமுடியும். வட கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்ற சங்கம், இவ் வழியிலே கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக தன் பணியினை ஆற்றிவருகிறது. ஆண்டு தோறும் விழாக்கொண்டாடி கலை நிகழ்ச்சிகளை வழங்கிவரும் இக் கிராம முன்னேற்ற சங்கம் இவ் ஆண்டு வெள்ளி விழா ஆண்டாகையால் சிறப்பான முறையிலே விழாவினைச் கொண்டாடவும் ஓர் நினைவுச் சிறப்பு மலரை வெளியிடவும் தீர்மானித்துள்ளது.

மக்கள் மனதைக் கலாச்சார சீரழிவுகளுக்கு இட்டுச் செல்லாமல் நல்ல வழியிலே நெறிப்படுத்தும் பணியிலே இக் கிராம முன்னேற்ற சங்கம் உழைத்து வருகின்றது. இந் நிலையப் பொறுப்பாளர்கள் பாராட்டுக்குரியவர்கள். இவர்களுடைய அயரா உழைப்பின் பிரதிபலிப்பே இவ் மத்திய கிராம முன்னேற்ற சங்கத்தின் பணிகளாகும். வெள்ளிவிழா வெற்றியுற நடந்தேறவும், விழாமலர் அழகுற அமையவும், மத்திய கிராம முன்னேற்ற சங்கம் மென்மேலும் மக்கள் பணிகளை ஆற்றவும் என் மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி.

மதிப்புக்குரிய

## திரு. வி. தம்பிஐயா அவர்கள்

# மன்றத் தலைவர் மொழிந்தவை

எமது மலரைப் படிக்கும் அன்பர்கள் கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் அன்றுமுதல் இன்றுவரை உறுதியாக நிலைகொண்டு உரைப்பதை அறித்து மகிழ்வர். கோண்டாவில் வாழ் மக்கள் பலதுறைகளிலும் ஆற்றிய பங்களிப்பைத் தெர்ந்து அக மகிழ்வர். இச்சுப வேளையில் நாமும் ஒரு மலர் வெளியிட வேண்டும் என்ற எண்ணக்கருவை கொண்டவரும் அதை நனவாக்குவதற்கு பலரோடு முதன்மையாக உழைத்தவருமான எம் அருமருதந்தன்ன செயலாளர் சி. ஆனந்தராஜாவை பாராட்டுவது ஒரு மகிழ்ச்சியான செயலாகும்.

அதேவேளை கோண்டாவில் வடக்கு ம. கி. மு. ச. மக்கள் ஒன்று கூடி இம் மன்றத்தை அமைக்க அயராது உழைத்த தாபனத் தந்தைகளை நன்றியறிதலோடு நினைவு கூறுகிறோம்.

இன்றைய உலகிலே சங்கமும் அதன் நிறுவனங்களும் எம் அனைவரையும் பல துறைகளிலும் பாதிக்கின்றன. அரசியல் தாக்கம் எங்கணும் வியாபித்திருக்கின்றது, இந்த நிலையிலே மத்திய கிராம முன்னேற்றச் சங்கங்கள் வேண்டுமா? அவை எதைச் சாதிக்கும்? என்ற ஐயப்பாடுகள் எழுதல் இயற்கையே. ஆகவே இத்தருணத்தில் இத்தகைய சங்கங்கள் ஆற்றும் இன்றியமையாத பணி குறித்து ஒரு சிறு குறிப்பு கூறலாம் என எண்ணுகிறேன்.

எமது கிராம முன்னேற்றச் சங்கம் போன்றவற்றை அரசியல் துறை அறிஞர்கள் தன் விருப்புத் தாபனம் (Voluntary Association) என்றழைப்பர். அவை குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைவதற்காக ஸ்தாபிக்கப்படும், நிறுவனங்கள் யாருடைய வற்புறுத்தல்களுக்கும் கட்டுப்படாத தன்னிச்சையாக அமைவன. அவை மக்களின் நல்வாழ்விற்கு பெரும் பணிபுரியக்கூடியவை என்பதை சமூக வாழ்வில் பங்கு கொள்வோர் நன்கறிவர். அரசறிவாளரும் ஆளப்படுவோரும் என்னும் தமது பிரசித்தி பெற்ற நூலில் பின்வருமாறு கூறுவர். கடைசியாகப் பார்த்தால் சனநாயக நிறுவனங்கள் வெற்றி பெறுவது அவற்றைச் செயல்படுத்த சுறுசுறுப்புள்ளவரும் பொறுப்பு வாய்ந்தவர்களுமான சிறு பாலாரான சனநாயக வாதிகள் போதுமான அளவில் இருக்கிறார்களா இல்லையா என்பதைப் பொறுத்ததாகும்.

எமது கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்க மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றல், ஒருமைப்பாடு, ஆபத்தில், உதவும் பண்பு, நல்ல காரியங்களுக்கு கைகொடுத்துதவுதல், தலைமையுடன் தோளோடு தோள் நின்று தொழிற்படும் தகமை, பொறுப்புணர்வுடன் கூடி தன் நம்பிக்கை, இவையெல்லாவற்றிற்கும் மேலாக தம்மோடு சேர்பவர்களை அன்பினால் ஈர்க்கும் தன்மை இப் பாரம் பரியம் சிதைவுறாது உழைப்பது எமது அன்புக் கடமையாகும்.

வி. தம்பிஐயா
தலைவர்
ம. கி. மு. ச.
கோண்டாவில் வடக்கு

*With Best Compliments from*

# EVERVISION

Repairs & Service of Electronic Equipments & Computors
Video Films rental service & Filming Outdoor Still Photography

21A, CLOCK TOWER ROAD, JAFFNA.

வெள்ளிவிழாக்காணும் மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்திற்கு
எமது வாழ்த்துக்கள்

# அக்பா கொலெக்ரிங் சென்ரர்

# AGFA COLLECTING CENTRE

(புகையிரதநிலையவீதிச் சந்தி)

380, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

வெள்ளி விழாக்காணும் மத்தியகிராமமுன்னேற்றச் சங்கம்
மேன்மேலும் வளர எமது நல்வாழ்த்துக்கள்

# சிவா பிரதர்ஸ்

பலசரக்கு, ஓடு, ஹாட்வெயர் பொருட்கள் விற்பவர்கள்

பலாலி வீதி, கோண்டாவில்.

# மத்திய கிராம முன்னேற்றச்சங்க 86 - 87 ஆண்டு உத்தியோகஸ்தர்கள்

போஷகர் : க. நாகலிங்கம்

தலைவர் : திரு. வீ. தம்பிஐயா

துணைத்தலைவர்கள் : திரு. பொ. சிவானந்தம்,
திரு. இ. யோகராஜா

செயலாளர் : செல்வன் சி. ஆனந்தராஜா

உப செயலாளர் : திரு. மா. இலக்கணகுமார்

பொருளாளர் : செல்வன் ச. பாலசிங்கம்

அங்கத்தவர்கள் :

செல்வன் சி. ஜெயராஜா
செல்வன் பொ. உதயகுமார்
செல்வன் வ. வசந்தன்
திரு. பொ. இராசலிங்கம்
திரு. பொ. ஞானசேகரம்
செல்வன் பொ. கீதராஜன்
செல்வன் பொ. துரைராஜா
செல்வன் ஐ. தேவராஜா
செல்வன் வே. தர்மகுலசிங்கம்

கணக்காய்வாளர் : திரு. வே. சுந்தரம்

3

## கிராமத்தொண்டன் கே. பி. சுந்தரலிங்கம் அவர்கட்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தினது

# பாராட்டு

கோண்டாவில் வடக்கில் நாம் பெருமை கொள்ளக்கூடிய கிராமத் தொண்டினை செய்து நன் மதிப்பை பெற்றவர் கே. பி. சுந்தரலிங்கம் அவர்கள். இவர் ம. கி. மு. ச. ஆரம்ப வளர்ச்சிக்கு முக்கிய தொண்டாற்றினார். சொல்லப்போனால் இவரது அயராத உழைப்பினாலேயே இன்றைய ம. கி. மு. ச. மண்டபம் கட்டிமுடிக்கப்பட்டது எனலாம். வயதில் சிறியவனாக இருந்த போதும் அறிவால் பெரியவராகக் கொள்ளப்பட்டு பெரியோர்களுக்கு புத்திமதி கூறி அவர்களை நல்வழிப்படுத்திச் சென்ற பெருமை இவரையே சாரும்.

ம. கி. மு. ச. முக்கிய விடயங்களில் இவர் பங்கு கொள்ளாத விடயங்களே இல்லை எனலாம். இவர் பத்தாண்டுகள் இக் கிராம முன்னேற்றச் சங்கத்தின் செயலாளராக கடைமை புரிந்து எவ்வளவோ அபிவிருத்தி வேலைகளை செய்து முடித்துள்ளார். கே. பி. சுந்தரலிங்கம் அவர்களை நாம் இன்று பாராட்டுவதால் எமது ம. கி மு. சங்கம் பெருமை கொள்கிறது. ஒரு நல்லாசான் மூலமாக எத்தனையோ நல்லா சனங்கள் உருவாக்கி வருகின்றது.

இன்று முன்னேற்றப் பாதையின் அடிக்கல் என்று கூறப்போனால் கே. பி. சுந்தரலிங்கம் அவர்களையே கூறலாம். இவர் இன்றும் எமக்கு உதவி புரிந்து வருகிறார். தற்போது நமது ஊரில் இல்லாவிட்டாலும் தான் பிறந்த கிராமத்தை மறக்காது கிராம மக்களுடன் அடிக்கடி கலந்துரையாடி ம. கி. மு. ச. வளர்ச்சியில் பங்குகொண்டு வருகிறார். இவரது சேவை மென்மேலும் வளர இவர் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல அம்பிகை ஸ்ரீ சிவகாமி அம்பாள் அருள் பாலிப்பாராக.

சி. ஆனந்தராஜா
செயலாளர்
ம. கி. மு. ச. கோண்டாவில்

## ஊர் தொண்டன் கதிரவேலு பாலசிங்கம்

மத்திய கிராமமுன்னேற்றச் சங்க ஆரம்ப கால வளர்ச்சிக்கு வித்திட்டவரும் கிராம இளைஞர் குழுவின் தலைவராக கடமை புரிந்தவருமான க. பாலசிங்கம் அவர்களை ம. கி. மு. சங்கம் பாராட்டுகின்றது. தனது இளம் பருவத்தை வெறுமனே கழிக்காது நல்ல பயனுள்ள காரியங்களுக்காக பயன்படுத்தினர்.

இவர் தன் வீடு போற்ற வாழாது நம் நாடு போற்ற தமிழினம் வாழ வழிவகுக்க வேண்டுமென வாழ்ந்தவர் அமரர் பாலசிங்கம். இவரது வாழ்வில் சகித்துக்கொள்ள முடியாத சிக்கல்கள் ஏற்பட்டதால் இவரது சேவை முழுவதையும் பெறமுடியாது போய்விட்டது. இவர் எங்கிருந்தாலும் நற்றதமிழ்நாடும் அவர் பிறந்த கிராமமும் என்றுமே மறக்காது. இவரது அன்றைய சேவைகளை எமது ம. கி. மு. சங்கம் பாராட்டுகிறது.

ம. கி. மு. சங்கம்
**கோண்டாவில்**

## 1960-ம் ஆண்டிலிருந்து 1987 வரையிலான தலைவர், செயலாளர், பொருளாளர்

| திகதி | தலைவர் | பொருளாளர் | செயலாளர் |
|---|---|---|---|
| 9-01-60 | மா. நவரத்தினம் | ந. இராசையா | பி. சுந்தரலிங்கம் |
| 23-01-61 | வீ. பொன்னுத்துரை | நா. சுப்பையா | மா. நவரத்தினம் |
| 04-10-61 | மா. நவரத்தினம் | மு. தர்மலிங்கம் | பி. சுந்தரலிங்கம் |
| 29-04-62 | வீ. பொன்னுத்துரை | வீ. தம்பிஐயா | பி. சுந்தரலிங்கம் |
| 04-10-63 | மா. சீவரத்தினம் | க. நாகலிங்கம் | ச. இராசையா |
| 22-02-64 | சி. ஐயாத்துரை | வ. சின்னராசா | ப. சுந்தரலிங்கம் |
| 27-09-67 | இ. செல்லையா | ச. குலசிங்கம் | பி. சுந்தரலிங்கம் |
| 12-11-70 | ந. அப்புத்துரை | ஐ. ஞானசேகரம் | வி. நவரத்தினம் |
| 31-05-72 | மு. தர்மலிங்கம் | க. கிருஷ்ணன் | பி. சுந்தரலிங்கம் |
| 8-10-73 | அ. சோமசுந்தரம் | பொ. செல்வராஜா | பி. சுந்தரலிங்கம் |
| 7-04-76 | மா. உதயகுமார் | த. தேவராஜா | சு. மகேந்திரம் |
| 3-07-77 | ச. குலசிங்கம் | இ. யோகராஜா | பி. சுந்தரலிங்கம் |
| 24-02-80 | மா, குணசிங்கம் | சு. மகேந்திரம் | த. ஸ்ரீதரன் |
| 24-06-84 | மா. குணசிங்கம் | வே. சுந்தரம் | அ. பரமானந்தசிவம் |
| 19-02-85 | க. முத்துலிங்கம் | வே. சுந்தரம் | ச. பாலசிங்கம் |
| 15-03-86 | வீ. தம்பிஐயா | ச. பாலசிங்கம் | சி. ஆனந்தராஜா |

## மத்திய கிராம முன்னேற்றச் சங்கம்
## தனது வளர்ச்சிப் படிகளில்
# மக்களுக்கு ஆற்றிய சேவைகள்

1960 ஆம் ஆண்டு தை மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமான இந்த மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் தான் நடந்துவந்த பாதையை திரும்பிப் பார்க்கிறது.

இருபத்தைந்து ஆண்டுகள் தனது பணியை மக்களுக்கு வெகு சிறப்பாக செய்துள்ளது. இவ்வேளையில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தை உருவாக்க மூல காரணமாக இருந்த இவ்வூர் பெரியார்களை எண்ணிப்பார்க்க வேண்டும். இவர்களின் அயரா உழைப்பினாலும் தன்னம்பிக்கை விடாமுயற்சி போன்றவற்றாலேயே இவ்வளவு தூரம் வளர்ந்துவந்து மக்களுக்கு சேவை புரிந்தது எனலாம். மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் மக்களுக்கு ஆற்றிய பணிகளில் சில.

15-5-1960 இல் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் தனது பணியில் முதன் முதலாக, எமது கிராமத்துக்கு பொது மருத்துவமனை ஒன்று தேவை எனவும் அதற்கு மருத்துவமாது ஒருவரை நியமித்து எமது கிராமத்து மக்களுக்கு சேவை புரியவேண்டுமெனவும் இலங்கை அரசுக்கு மகஜர் மூலம் வேண்டுகோள் விடுத்தது. அது பின் அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

குடிநீர் தேவையை ஓரளவு பூர்த்திசெய்யும் நோக்குடன் பொதுமக்கள் பாவனைக்காக 23-1-1961 இல் இரு கிணறுகளை அமைத்து அவர்கள் தேவைகளை ஓரளவு பூர்த்திசெய்தது.

கிராமத்து சிறுவர்களிடையே இளம்பிள்ளை வாதநோய் பரவாது இதனை தடுப்பதற்கு இலங்கை அரசின் பொது சுகாதாரஸ்தாபனத்துடன் தொடர்புகொண்டு அதற்கான தடுப்பு இயக்கத்தை 28-02-1962 இல் ஆரம்பித்து நோய்தடுப்பு வேலைகளில் ஈடுபட்டது.

மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்திற்கு நிலையான கட்டிடம் ஒன்றை அமைப்பதற்காக இலங்கை அரசின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமென மகஜர்மூலம் வேண்டியது.

இவ் விடயத்தை கவனிக்க யாழ்ப்பாண அரசாங்க அதிபர் (1963 ஆம் ஆண்டு) உயர்திரு. ஐவன் சமரவிக்கிரம தலைமையிலான ஒரு குழுவும் ஆரம்பிக்கப்பட்டது.

இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 23-11-1968 இல் உதவி வழங்கியது.

23-11-1963 இல் மரணமான அமெரிக்க ஜனாதிபதி கெனடிக்கு அன்றைய தினம் அனுதாபச் செய்தி அனுப்பப்பட்டது.

சத்துணவு அற்ற சிறார்களுக்கு சத்துணவு வழங்கும் நோக்குடன் பால்நிலையம் ஒன்றை 15-07-1965 இல் ஆரம்பித்து இலவசமாக பால் விநியோகம் செய்யப்பட்டது.

1-12-1955 இல் சிரமதான இயக்கம் ஆரம்பித்து இதன்மூலமாக கிராம மக்களுக்கு வேண்டிய பொதுத் தேவைகளை சிரமதான முறையில் மேற்கொண்டனர்.

படித்த யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்குடன் 10-04-1956 இல் கைத்தறி நூல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது.

கிராம மக்களின் விளையாட்டுத்துறையை பண்படுத்தவும் உள்ளூர் போட்டியாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும் 21-2-1970 இல் விளையாட்டுத்துறை அமைச்சினது உதவியோடு விளையாட்டுப்பொருட்கள் பலவற்றை பெற்றுக்கொடுத்தது.

கோண்டாவில் வாழ் மக்களுக்காக சேவைபுரிந்த கிராம சேவகர் திரு. தளையசிங்கம் அவர்கட்கு சேவைநல பாராட்டுவிழா 7-1-1973 இல் நடைபெற்றது.

31-3-1973 இல் கோண்டாவில் வடக்குப் பகுதிக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்க முயற்சியால் மின்னிணைப்பு வழங்கப்பட்டது.

கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் போன்ற நடவடிக்கைகளை மேன்படுத்த யாழ் லயன்ஸ் கழக உதவியோடு 9-03-1979 இல் சிரமதான இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியது.

கிராம மக்களின் வசதிக்காக ந. ப. கூ. ச. கிளை நிறுவனத்தை தனது பகுதியில் 8-6-1974 இல் நிறுவியது.

கலை ஆர்வம் கொண்டவர்களை ஒன்றுதிரட்டி அண்ணா கலையகம் என்ற நாடக மன்றத்தை 8-09-1976 இல் ஆரம்பித்தது.

கிராமத்து சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக 3-02-1977 இல் பாலர் பாடசாலையை ஆரம்பித்தது.

பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு மாலை நேரத்தில் இலவசப் போதனை வழங்க மாலை நேரப் பாடசாலையை 12-12-1977 இல் ஆரம்பித்து மாணவர்களுக்கு கல்வியூட்டியது.

17-01-1978 இல் மத்திய கிராம முன்னேற்றச் சங்க 18 ஆவது ஆண்டு விழாவை கொண்டாடியது.

தென்னிந்திய பிரபல பக்திப்பாடகி கே. பி. சுந்தராம்பாள் 24-09-1978 இல் மரணமானதால் அவரது குடும்பத்துக்கு அனுதாபச் செய்தி அனுப்பப்பட்டது.

மத்திய கிராம முன்னேற்றச் சங்கததின் இந்து சமய கலாச்சார பிரிவு அகில இலங்கை இந்து சமய கலாசார பிரிவில் 18-12-1980 இல் பதிவு செய்யப்பட்டது. பதிவெண் 6/2/J/2/1.

பாலர் பாடசாலையின் ஆண்டுவிழா 20-01-1981 இல் கொண்டாடப்பட்டது.

குடிநீர் வசதியை மேலும் விரிவுபடுத்துவதற்காக ரூபா 22,000 செலவில் 20-01-1981 இல் தண்ணீர் தாங்கி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மத்திய கிராம முன்னேற்றச் சங்கமும் ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையமும் சேர்ந்து மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தில் பொதுப் பணிமன்றம் 12-10-1982 இல் உருவாக்கப்பட்டது.

20-01-1981 இல் ஆரம்பிக்கப்பட்ட தண்ணீர்த்தாங்கி திறப்புவிழா 28-01-1983 இல் நடைபெற்றது. பிரதம விருந்தினராக நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் கலந்துகொண்டார்.

குடியிருப்பு வசதியற்ற 10 வறிய குடும்பங்களுக்கு 12-04-1985 இல் 10 பரப்பு காணி வழங்கியது.

மலசலகூட வசதியற்ற மக்களுக்கு மலசலகூடம் அமைக்கும் பணி 22-08-1985 இல் ஆரம்பமானது.

மத்திய கிராம முன்னேற்றச் சங்க பாலர் பாடசாலைக்கு மில்க்வைற் தொழிலதிபர் க. கனகராஜா அவர்கள் 29-05-1986 இல் 15000/- பெறுமதியான தளபாடங்களை அன்பளிப்புச் செய்தார்.

14-07-1986 இல் வசாவிளானில் ஏற்பட்ட இராணுவ கெடுபிடிகளால் அகதிகளாக, மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தில் தஞ்சம் அடைந்தோருக்கு ஆதரவு வழங்கி பாதுகாத்து வருகிறது.

எமது கிராமத்து எழுத்தாளரான மாத்தளை ஆ. இராசலிங்கம் எழுதிய "புதுயுக நாயகிகள்" என்னும் நூல் வெளியீட்டு விழாவை 31-08-1986 இல் நடாத்தியது.

27-10-1986 இல் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் மூலமாக வழங்கப்பட்ட ரூபா 15000 பெறுமதியான மூன்று வீடுகளை பொறுப்பேற்று ஏழைக்கு சிரமதான முறையில் செய்து கொடுக்கப்பட்டது. கிராம மக்களுக்கு உதவிகளை மேற்கொள்ள சிரமதான பணிகளை செய்வதற்காகவும் 27-10-1986 இல் வாழ் ரொட்டறிக் கழகத்துடன் இணைந்து மத்திய கிராம முன்னேற்றச் சங்க ரோட்டறிக் கிராமக் குழு என்னும் குழுவை அமைத்தது.

மத்திய கிராம முன்னேற்றச் சங்க கிராமக்குழு மூலம் கிராம மக்களுக்கு ஆற்றிய பணிகள்

* 29-10-1986 இல் சிரமதான மூலமாக குழாய்க்கிணறு தோண்டியது.
* மலசலகூட வசதியற்றவர்கட்கு 10 மலசல கூடங்களை 01-11-1986 இல் அமைத்துக் கொடுத்தது.
* மத்திய கிராம முன்னேற்றச்சங்க நூலகப் பிரிவுக்கு ஆயிரக்கணக்கான நூல்களும் இதனை பாதுகாக்க ஒரு அலுமாரியும் 02-11-1986 இல் வாழ் ரொட்டறிக் கழகத்தால் அன்பளிப்பு செய்யப்பட்டது.

* மாலை நேர பாடப்போதனைக்கு ஆசிரியை ஒருவரை நியமித்து மாலை நேர பாடப் போதனையை நடாத்தி வருகின்றது-

* 28-11-1986 இல் மரம் நாட்டுவிழா நடைபெற்றது. அன்றையதினம் மில்க்வைற் உதவியோடு ஆயிரக்கணக்கான மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

* மீன் சந்தை, புதிய வீதி என்பன 20-12-1986 இல் திறந்துவைக்கப்பட்டன.
* 28-01-1987 இல் இரு கால்களும் ஊனம் அடைந்த ந. செல்வராஜா என்பவருக்கு முச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

* யாழ் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையில் சிரமதாம் மூலம் 23-01-1987 இல் தென்னை, மா, வேம்பு போன்ற மரக் கன்றுகளை நாட்டியது.

தொடர்ந்து தமது பணியில் முன்னேக்கிச் செல்கின்றது.

S. ஆனந்தராஜா
கௌரவ செயலாளர்

# ஆசியுரை

எனது பகுதியை சேர்ந்த கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், கடந்த 25 வருடங்களுக்கு முன்பு நல் நோக்கம் கொண்ட பெரியவர்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. சகல செல்வங்களையும் கொழிக்கும் அருள் மிகு சிவகாமி அம்பாள் ஆலயத்தின் அருகில் அழகு மிகு மண்டபமாக அமைத்து அரும் பணி ஆற்றிவருகின்றது. இந்த நிலையத்தை ஆரம்பித்தவர்களின் நல்ல உள்ளமும் முயற்சியும் நிலைய வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமைந்தது. கடந்து 13 வருடகாலமாக இந்த நிலையத்துடன் தொடர்புகொண்டுள்ளேன். இக் காலத்தில் நிலைய நிர்வாகிகள் கிராம முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறையுடன் செயற்படுகின்றனர். இவர்களது முயற்சியினால் சிவகாமி அம்பாள் ஆலயம் அழகுமிகு ஆலயமாக காட்சி அளிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வாந்தி பேதி நோய் ஏற்பட்டபோது ம. கி. மு. ச. இளைஞர்களின் ஒத்துழைப்புடன் சிரமதான மூலம் மலசலகூடம் அமைத்தும் கிணறுகளுக்கு நோய் தடுப்பு மருந்துகள் போடுதல்போன்ற பணிகளையும் செய்துள்ளனர். இப் பகுதி மக்கள் கல்வியில் பின்தங்கி இருப்பதை உணர்ந்த நிலையத்தினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பாலர் கல்வி நிலையத்தை அமைத்து நடாத்தி வருகின்றனர்.

குடிநீர் பிரச்சனையை தீர்ப்பதற்கு கௌரவ நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்களுடன் தொடர்புகொண்டு தண்ணீர் தாங்கி அமைத்து குடிநீர் வழங்குகின்றார்கள்.

தற்பொழுது செயல்படுகின்ற நிர்வாகசபை உறுப்பினர்களின் முயற்சியினால் மரநடுகை இயக்கம், அகதிகள் நிவாரண உதவி, சுகாதாரம், குற்றத்தடுப்பு போன்ற முன்னேற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதையிட்டு மிகவும் மகிழ்சி அடைகின்றேன்.

இந் நிலையம் இப்பகுதி மக்களுக்கும், கிராமத்துக்கும், நாட்டுக்கும் தொடர்ந்து சேவையாற்றவேண்டும் என்று எல்லாம்வல்ல சிவகாமி அம்பாளை வேண்டிக்கொள்கிறேன்.

ச. கனகலிங்கம்
கிராம சேவை அலுவலர்
கோண்டாவில் கிழக்கு

ரஜனி மோட்டார்ஸ்

ரிவைண்டேர்ஸ்

மோட்டார் ஆமெச்சர், (F)பான் றிவைண்டிங் செய்வதிலும்,
மின்சார உபகரணங்கள் திருத்துவதிலும்,
கடைச்சல் வேலைகளிலும் பிரசித்தி பெற்றவர்கள்

**ரஜனி மோட்டார்ஸ்**

175, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# HOME NEEDS

(Dealers in furniture)
278, 280 (402), K. K. S. ROAD,
JAFFNA.

★ O ★

**ஹோம் நீட்ஸ்**

யாழ்ப்பாணம்

அன்பளிப்பு

# கார்த்திகா ஸ்ரோர்ஸ்

பலசரக்கு வியாபாரம்

கோண்டாவில் கிழக்கு R. M. S. கோண்டாவில்

உரிமையாளர்
இராசமணி

# சைவசமயிகள் மூடச் செயல்களுக்கு இடங்கொடுக்கலாகாது

கண்ட பாவனையில் கொண்டை முடிதல் போலவும், இரவல் புடவையில் கொய்யகம் விடுதல் போலவும் பலர் நம் சமய அடிப்படைத் தத்துவங்களை விளங்கிக் கொள்ளாது பல கருமங்களைச் செய்து விடுகின்றனர். இவற்றுட் சில சமய அடிப்படைக்கும் பழக்கவழக்கங்களுக்கும் பொருத்தமாய் அமைந்தாலும் பல நம் சமயப் பண்பாட்டுக்கு விரோதமாகவும் சில இப்படித்தான் நம் சமயச் சடங்குகளில் மூடக் கிரியைகள் இடம் பெற்றனவோவென்று பலரைச் சிந்திக்கத் தூண்டுவனவாயும் அமைந்து விடுகின்றன.

கோவிலில் விபூதி சந்தனம் அணிவது போன்று பலர் அங்கு கற்பூரம் கொளுத்தும் இடத்தில் உள்ள கரியால் பொட்டு இடுகின்றனர் இதே போல சுவாமி வீதியால் வரும்போது மங்கலமாக வைக்கின்ற நிறைகுடத்தை சுவாமிக்கு முன் எடுத்து ஊற்றுவதையும் சுவாமிக்குச் செய்யும் மரியாதையாகப் பலர் கருதுகின்றனர். இவையெல்லாம் சமீப காலத்தில் நம் சைவ மக்களிடையே வந்து புகுந்த செயல்களாம்.

திருநீறும், குங்குமமே சமயச் சின்னங்களாகும். சந்தனம் இவற்றுக்கு விரோதமில்லாதமங்கலச் சின்னம் என மதிக்கத் தக்கது.

குழந்தைகளுக்கு கண்ணூறு கழிப்பதற்காக கரிப்பொட்டு இடுவதோடு யாகம் செய்யும்போது ஓமாக்கினியின் பிரசாதமாக தருப்பைக் கரியை எடுத்து ஓமசேடமான நெய்யினால் குழைத்து அணியப்படும் கரிப்பொட்டுமே தரிக்கத்தக்கதாகும் ஓமாக்கினியில் கிடைக்கும் கரிப்பொட்டு இரட்சை என்றே மதிக்கப்படுகின்றது. இப்படியான மதிப்புமிக்க கரிப்பொட்டைக்கூட ஒருவரும் நெற்றியில் துலக்கமாக அணியும் வழக்கம் இல்லை. ஏனென்றால் நெற்றியில் கரிப்பொட்டு இருப்பது அமங்கலமாக இருக்குமென்பது சைவத்தமிழ் மக்களின் பாரம்பரியமான கொள்கையாகும்.

நெற்றியில் பிரகாசமாக விளங்கும் திருநீற்றின் அழகை இலக்கியங்களிலும் தேவாரம் முதலியவற்றிலும் சிறப்பித்து பாடியிருப்பது போன்று யாக ரக்ஷையாகிய கரிப்பொட்டினை எந்த நூலிலும் புகழ்ந்தும் வருணித்துப் பாடாததிலிருந்து நெற்றியில் கரிப்பொட்டை அணிவது வரவேற்கத் தக்கதன்று என்று அறிந்து கொள்ளலாம் நெற்றியில் கரிப்பொட்டை பிரகாசமாக அணிவதை எவரும் போற்றாத காரணத்தால்தான் அக்காலத்தில் யாகத்தில் கிடைக்கும் கரிப்பொட்டைக் கூட துலக்கமாக ஒருவரும் அணிவதில்லை. இதுமட்டுமன்றி;

பசுவின் சாணத்தினால் விபூதி தயாரிக்கும்போது கரிநிற விபூதி செந்நிற விபூதி என்பனவற்றை விலக்கி வெண்ணிற விபூதியை மட்டுமே தெரிந்து எடுத்து அணிய வேண்டும் என்பதும் விதியாகும். கருநிறவிபூதி அணிவதால் தரித்திரமுண்டாகும் என்றே நம் சமய சாஸ்திரங்கள் கூறுகின்றன. எனவே ஆலயத்துக்குச் செல்பவர்கள் விபூதி சந்தனம் குங்குமம் ஆகியவற்றையோ இவற்றில் ஒன்றையே அணிவதன்றி கற்பூரக்கரியை நெற்றியில் இடுவது விலக்கத்தக்கதாகும்.

சுவாமி வலம் வரும்போது பந்தல் இட்டு தோரணம் மாலை என்பன தூக்கி நிறைகுடம் வைப்பது மங்கலச் சிறப்புக்காகவே செய்யப்படுகின்றது. இவற்றை சுவாமி அவ்விடத்திலிருக்கும்போது அகற்றாமல் பாதுகாப்பதே மங்கலத்தை நீடிக்கச் செய்வதாய் அமையும். சுவாமி புறப்படுமுன்னர் சுவாமி நிற்கும் போதே பந்தலைப் பிடுங்குவதோ தோரணங்களைப் அறுப்பதோ சுவாமியை அவமதிப்பதாய் அமைவது போலவே நிறைகுடத்தை எடுப்பது, சரிப்பது, ஊற்றுவது எல்லாம் அமங்கலத்தை உண்டுபண்ணுவதாயும் சுவாமியை அவமதிப்பதாயும் அமையும்,

வீடுகளில் கலியாணம் முதலிய மங்கல காரியங்களுக்காக அமைத்த பந்தல் முதலியவற்றை உடனடியாகக் கழற்றாமல் 3 நாள் ஐந்து நாள் சென்றபின் கழற்று வதிலிருந்தும் மரண வீட்டில் அமைத்த பந்தலை உடனடியாகக் கழற்றி அப்புறப் படுத்துவதிலிருந்தும் அமங்கலத் தொடர்பானவற்றை உடனடியாக நீக்கவேண்டும் என்பதையும் மங்கல காரியங்கள் தொடர்பானவற்றை உடனடியாக அப்புறப்படுத்த லாகாது என்பதையும் சுலபமாக உணர்ந்து கொள்ளலாம்.

கற்பூரக் கலை அணிதல் நிறைகுடத்தை சுவாமிக்கு முன் எடுத்து ஊற்றுதல் என்பன போன்ற தவறுகள் போலவேகோவில் விளக்கில் உள்ள எண்ணெய்யை மருந் தாகக் கருதி உடலில் தேய்த்தலும் கருதப்படும். இது கோவிற்பொருளை அபகரிக்கும் பாபமாகவே முடியும்.

ஆதலால் சைவ சமயிகள் தாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் பிரமாணம் உண்டா? இல்லையேல் அக்காரியம் யாரால் முதலில் செய்யப்பட்டது. தற்காலத்தில் உள்ள நவீனர் தொடங்கிய செயல்கள் சமய முரண்பாடாக அமையுமா என்பதை யெல்லாம் சிந்தித்து ஆராய்ந்து செயற்படவேண்டும்.

இக்காலத்தில் பல செத்த வீடுகளில் சோடா கொடுக்கும் நாகரீகம் உருவாகி வருகின்றது இது மிகமிக அருவருக்கத்தக்கதாகும். ஒரு செத்த வீட்டில் அதி முக் கியத்துவம் வாய்ந்த கருமம் இறந்தவர் தொடர்பான அவரின் உடலுக்குச் செய் யும் மரியாதையும் நன்றி உணர்வுமேயாகும். இறந்தவரின் உயிர் அவருடைய உட லில் பிரவேசிக்க முடியாமலுடல் அங்கே சஞ்சரிக்கும் என்பதால் அவரைப்பற்றிய குறைகளைப் பேசினால் அதற்குச் சமாதானமோ மன்னிப்போ தெரிவிக்க முடியாமல் அவர் வேதனைப்படுவாரென்றும் ஆதலால் அவரைப்பற்றி நற்பண்புகளை மட்டுமே செத்த வீட்டில் பேசவேண்டும் என்றும் ஒரு கொள்கையுண்டு. இக்கொள்கை ஆசாரம், சுகாதாரம் என்பவற்றுக்கு மிக விரோதமற்ற நாகரீகமானதாகும். செத்த வீட்டில் சோடா கொடுத்தலும் பருகுதலுமோ நேர்மாறானது. சுகாதாரத்துக்கே கேடானது. மற்றவர் சோடாக் குடிக்கும் போது தானும் அப்படிக் குடிக்க முடியவில்லையே என்று இறந்த சீவன் வேதனைப்படவும் கூடும். ஆதலால் செத்த வீட்டை கொண் டாட்டமாகக் கருதாது இறந்தவருக்கு மரியாதை செய்யும் — நன்றி தெரிவிக்கும் இடமாகக் கருதிச் செயற்படவேண்டும்.

சைவ சமயிகள் பழமையான செயல்களின் காரிய காரணங்களை விளங்குவ தோடு புதிய நடைமுறைகளை மேற்கொள்ளும்போதும் அவதானமாக இருத்தல் வேண்டும்.

— பண்டிதர் இ. பொன்னம்பலவாணர்

# இன்றைய பெண்கள்

பண்டையகாலப் பெண்கள் தம் சமுதாயத்துக்குப் பயந்து வெளியேவராது, கல்வி கற்காது தம் அறிவைக் கொஞ்சங்கூட பெருக்கமுடியாமல், தம் முன்னோர்களின் அறியாமையைத் தகர்த்து எறியாது அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி கிடந்தார்கள். அக்காலப் பெண்கள் வீடுகளில் அடைபட்டு கிடந்து ஆண்களுக்கு பணிவிடை செய்வதற்காகவே தாம் இவ்வுலகில் பிறவி எடுத்ததாக கருதினார்கள்.

இன்றைய பெண்களோ தமது முன்னோர்களின் அடக்குமுறையை உடைத்து எறிந்து விட்டு தம் அறிவின் வளர்ச்சியால் எல்லா விதமானதுறைகளிலும் பணியாற்றி வருகின்றனர். ஒரு குடும்பத்தை நடாத்துவது கஷ்டமாகத் தான் இருக்கும்

இன்றைய பெண்கள் மருத்துவத்துறையிலும் பொறியியல் துறையிலும் வர்த்தகத்துறையிலும் பெரும்பணியாற்றி வருகின்றனர். இதுமட்டுமின்றி சமுதாய அடக்குமுறைக்கு எதிராகவும் எமது மக்களின் அடிமை வாழ்க்கைகளையும் எதிர்த்து போராடி எம் மக்களிடையே புதுயுகம் படைத்துக்கொண்டு இருக்கின்றனர்.

இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் எமது மக்களின் விடுதலைக்காக ஆண்களுடன் சமதையாக பெண்களும் போராடிக்கொண்டு இருக்கும் காலம் இது. சாதி மத பேதமின்றி வாழும் எம் மக்களிடையே நாகரிகத்தைப் புகுத்துவதில் பெரிதும் முன்னேறிக்கொண்டுள்ளவர்கள் இன்றைய பெண்கள். நாட்டின் விடுதலைக்காக இன்று எத்தனையோ பெண்கள் தங்கள் உயிரைக்கூட தியாகம் செய்துள்ளனர்.

இப்படியாகப் பெண்கள் முன்னேறிக்கொண்டு செல்கின்றனர். தற்போதைய பெண்கள் பொதுவாக எல்லா விதத்திலும் முக்கியத்துவம் அடைந்துவருகின்றனர் இப்பெண்கள் தங்கள் வேலைகளை ஆர்வத்துடனும் பொறுமையுடனும் கண்ணும் கருத்துமாய் செயலாற்றிக் கொண்டு இருக்கின்றனர். இதனால் பல நாடுகளில் பல பெண்கள் பெரிய பதவிகளிலும் நாட்டுத் தலைவர்களாகவும் பிரதமர்களாகவும் கடமையாற்றுகின்றனர். இத்துடன் மட்டும் நின்றுவிடாது. விண்வெளியிலும்கூட பல சாதனைகளை நிலைநாட்டிக் கொண்டுள்ளனர்.

இதேவேளை நாகரிகம் என்ற தோரணையில் அசிங்கமான செயல்களில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தாங்களும் போதைப் பொருள் கடத்தி போதை வஸ்துக்களுக்கு அடிமையாகி தங்கள் கற்புக்களை பறிகொடுக்கும் நிலைமைகளும் நிகழுகின்றன. அவற்றுடன் மட்டும் நின்றுவிடாது நாகரிகம் நாகரிகம் என்று சொல்லி பண்டைய பதினாறு முழச்சேலையை இன்று பாதிமுழமாக்கிவிட்டார்கள். பெண்கள் இந்த அநாகரிக நிலைமைகளின்றும் விடுபட்டு சமுதாய தேவைக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும். இதுவே வளர்ச்சியடைந்துவரும் இன்றைய உலகம் பெண்களிடமிருந்து எதிர்பார்ப்பது.

பி. சாந்தஜெயம்
கோண்டாவில் வடக்கு

# துணிந்திட்டால் விடிவு தூரத்தில் இல்லை

மறத் தமிழர் பரம்பரை
மானம் கொண்ட பரம்பரை
அடக்கி ஒடுக்கி
அடித்து உதைத்து
உதிரத்தை உறையவைத்த
உயிர் கொலையை கண்ட பின்னும்
உறங்கிக் கிடந்தால்
உயிர்கள் பிழைக்குமோ.

அடக்கி அடக்கி
அடிமைப்பட்டவர்
உடைக்க முயன்றனர்
பூட்டிய விலங்கை
மண்ணின் மைந்தர்
மண்ணில் மடிதல் (இல்லை)
மறையா மானத்துடன்
மண்ணில் வாழ்வது.

இழந்தோம் பலரை
இன்னும் விடிவில்லை
கரையுது காலம்
கண்ணீர் கடலாகியது
சிலகாலம் முன்னே
சிந்தனை ஊற்றில்
சீறி எழுந்து தமிழ் மண்ணை
சீர்செய்ய முனைந்(து)தார்.


விடியலை தேடி
விரையும் பாதையில்
வசந்தம் வரமுன்பே
வசைப்பட்டு கொள்வதேன்
வசையாகும் நாமெல்லாம்
வகைப் பட்டுக்கொண்டால்
வரு(கு)கிறது விரைவில்
தனியான தமிழீழம்.

இருள் சூழ்ந்த மண்ணில்
இருள் தான் நிலைப்பதா
ஒளி யேற்ற முனைந்தோர்
ஒளி காண வேண்டாமா
புறப்பட் டோம் நாம்
பூட்டை உடைத்து
விடியும் வானில்
விடியலை நோக்கி
தூரம் அதிகம் என்பதில்லை
துணிந் திட்டால்
தனியா தமிழ் மக்கள்
தமிழீழம் காண்பர்.

சரேஸ்

# மக்கள் பணியில்

# மத்திய கிராம முன்னேற்றச் சங்கம்



மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் மக்கள் சேவையை தனது தலையாய கடமையாகக் கொண்டு சேவை புரிந்து வருகின்றது. 25 வருட கால வரலாற்றில் தண்ணீர் தாங்கி அமைத்து சேவை புரிந்து வருவது குறிப்பிடத்தக்க செயலாகும். இதன் பயன் அளப்பரியது. இத் தண்ணீர் தாங்கியை அமைப்பதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்திருந்தபோதும் இந்த நிதி தண்ணீர் தாங்கி அமைப்பதற்குப் போதாத வேளையிலும் தண்ணீர் தாங்கி அமைப்பதற்கு அன்றைய மத்திய கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் மா. குணசிங்கம், செயலாளர்கள் த. ஸ்ரீதரன், அ. கந்தசாமி, பொருளாளர் சு. மகேந்திரராஜா ஆகியோரின் அயராத உழைப்பும், சேவை மனப்பான்மையுமே பெரிதும் உதவி புரிந்தது எனலாம்.

மக்களின் தண்ணீர் தேவைக்காக நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திருவாளர் மு. சிவசிதம்பரம் அவர்களால் 28-01-1983 இல் திறந்து வைக்கப்பட்டது. அன்று முதல் தனது சேவையை மக்களுக்கு வழங்கி வருகின்றது.

நன்றி

மா. இலக்கணகுமார்
உப செயலாளர்

விவசாயிகளே!

உங்களுக்குத் தேவையான

❊ உரவகைகள் ❊ விவசாய மருந்து வகைகள்

❊ களை கொல்லிகள், மற்றும்

❊ பலசரக்கு சாமான்கள், சீமெந்து

போன்றவற்றை நல்ல ரகத்திலும் நிதான விலையிலும்
பெற்றுக் கொள்ளச் சிறந்த இடம்

**திருநாவுக்கரசு அன் சன்ஸ்**

பலாலி வீதி,

கோண்டாவில் கிழக்கு, — கோண்டாவில்.

---

**RATNAMS**

ரட்ணம்ஸ்

House Wiring, Pipe Fitting and Electric Motor Repairing

★ ரட்ணம்ஸ் ★

**RATNAMS**

பலாலி வீதி, கோண்டாவில்.

---

# சோதி ஸ்ரோர்ஸ்

இருபாலை வீதி

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்திட

வீடியோ விஹொன்ஸ்

ஒளிப்பதிவாளர்: சி. இராஜராஜனின் கலை நுணுக்க ஒளிப்பதிவுக்கு

வீடியோ விஹொன்ஸ்

**VIDEO VIHONS**

அரசடி லேன், — கோண்டாவில் கிழக்கு

கோண்டாவில்

353, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

---

**நியூவே றெக்கோடிங்**

சிறந்த ஒலிபரப்புக்கு தாங்கள் நாடவேண்டிய இடம்
இன்றைய ஒளிப்பதிவின் முன்னோடி.

**நியூவே றெக்கோடிங்**

உரிமையாளர்: **T. A.** சந்திரன்

நல்லூர்.

# ஐந்து கண்டங்களும் ஆறறிவு மனிதர்களும்

— திக்வயல் —

மனித உடல்கள் விலைபேசப்படுகின்றன!

மனித உயிர்கள் மனிதனுக்கிய விஞ்ஞானக் கருவிகளுக்கு இரையாகின்றன! அவனின் எலும்புகள் சில நாடுகளால் ஏற்றுமதி செய்யப்படுகின்றன!

இந்நிலையில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்தை நாம் அடைந்து விட்டதாக உலகின் பாதிப்பேர் எண்ணித் தம்மைத்தாமே ஏமாற்றி வருகின்றார்கள்.

## குடும்பத்தின் கைதி

கனியும் கனிகளெல்லாம் படைப்பதற்கு உகந்தவை அல்ல.

பூக்கும் பூக்கள் எல்லாம் ஆண்டவனை அர்ச்சிக்கும் தகுதி கொண்டவையும் அல்ல. ஆண்டவனை அர்ச்சிக்கும் அலரி மலரே தன் வித்தில் மனிதனை அழித்துவிடும் விதையை உள்ளடக்கி இருக்கின்றது!

பூவுலகில் மலர்ந்துவிட்ட மனிதரெல்லாம் வாழ்க்கை என்ற வைகறைப் பொழுது விடிவதற்குச் சிலுவை சுமக்க வேண்டியோரே!

எமக்கு அளிக்கப்பட்ட இறைவன் தீர்ப்புக்களில் எமக்கு அருகேயுள்ள சிறைக் கதவின் சுவர்கள் நீட்டப்படலாம், குறுக்கப்படலாம்.

மனிதன் எங்குமே சுதந்திரமாகப் பிறக்கின்றான். ஆனால் அவன் எங்குமே அடிமைச் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளான் என்று ரூசோ எழுதினான். ஐந்து கண்டங்களிலும் வாழ்வோர் அந்தந்தக் கண்டங்களில் இறைவனால் சிறைவைக்கப்பட்டோரே!

வல்லரசு என்ற நாட்டில் வசிப்போர் மேலாதிக்க வாசிகளின் சிறையிலே வாடுகின்றார்கள்!

தாயின் சிறையிலே பத்துமாதம் வாழும் சிசு மீண்டும் தான் பிறந்து இருப்பது ஒரு சிறைச்சாலையே என அழுகின்றது. தாயின் பாலிலே வளரும் குழந்தை தந்தை என்ற சிறையன்பரை நம்பியே வாழ்ந்து வருகின்றது. நம்பிக்கையற்ற தாய் தந்தையரின் அச்சாணியை நம்பி வாழும் அக்குழந்தை தன்னைத் தானே பார்த்துச் சிரித்துக் கொள்கின்றது.

பொருளாதாரம் என்ற வலிமையை அடைந்த அக்குழந்தை திருமணம் என்ற பந்தத்தில் பழைய சிறையை உடைத்துக்கொண்டு செல்கின்றது.

ஆனால் திரும்பி வந்திருப்பதும் சிறைச்சாலைக்குத்தான்! திருமணம் செய்தவன் எப்படி வெளியே போவது என்ற 'கேட்'டைத் திறப்பதற்கு முன்பு புதியவன் வந்து

தன்னைத் தானே சிறைப்படுத்திக் கொள்கிறான்! இனி முதுமைவரை அவன் சிறையில் தான்! காலை என்ற வைகறைப் பொழுதில் அவன் எழுந்திட வேண்டும். சேவல் கூவிடும் நேரம் அவன் சிறை என்ற நித்திரைக் கூட்டைக் காலிசெய்தல் வேண்டும். பின்பு எட்டுமணி நேரத்துக்குமேல் உழைத்து நித்திரா தேவியின் மடியிலே விழ வேண்டும்! மனிதா—... உலகம் என்ற சிறைச்சாலையில் உனக்கு விடுதலை எப்போது?

மதத்தின் கைதி

**மதங்கள் பற்றித் தாய் வயிற்றில் இருக்கும்போது என்ன கவலை?**

**தாய் வயிற்றில் இருந்து இந் நிலவுலகில் நான் பிறந்ததும் தாயின் மதம் என் மதம் என உலகம் என் தலையைச் சிறைப்படுத்துகின்றது. அதன் பின்பு என் கண்ணில் காணும் மற்றவர்கள் யாவரும் மத வைராக்கியத்தால் என்னால் பிரிக்கப்பட்டவர்களாம்!**

**ஓ...... இறைவனே!**

மனிதனைப் பிரிக்க நீள் சுவர்கள்

**தாத்தாரியாரின் படையெடுப்புக்கு அஞ்சிய சீன மக்கள் தாத்தாரியாரைத் தம்மிடம் இருந்து அந்நியப்படுத்த நீண்ட மதில் ஒன்றைக் கட்டினர்.**

**ஓ—— மனிதா உலகம் ஒரு பிரிக்கப்பட்ட சிறையா?**

**ஒன்றாக வாழ்ந்த ஜேர்மன் மக்கள் வல்லரசுகளின் பங்கு போடலில் இரண்டாகப் பிரிந்தனர். கிழக்கு என்றும் மேற்கு என்றும் 'மானங்கெட்ட சுவரி'னால் (Wall of Shame) அவன் பிரிக்கப்பட்டான். அம்மா கிழக்கு ஜேர்மனியில், மகனோ மேற்கு ஜேர்மனியில்! பாசத்தைக் காணக் கம்பி வேலியருகே கண்ணீர் சிந்துவதைத் தவிர அவர்கட்கு வேறு ஏது வழி? இந்திய உபகண்டம் இரண்டாகப் பிளந்தது 1947 ல்! மேற்கிலும் கிழக்கிலும் பாகிஸ்தான் உருவானது. அதுவே மீண்டும் இரண்டாகப் பிளந்தது. இப்போது சுதந்திரம் பெற்றுக் கொடுத்தவனையே முள்வேலி பிரிக்கின்றது.**

**சுதந்திரமாக வாழ்ந்த பாலஸ்தீன மக்கள் அனுதைகளாக்கப்பட்டுள்ளனர் நாம் பிறப்பது எல்லாம் சிறைப்படவோ?**

மனிதனின் முதல் எதிரி மனிதனே

**மனிதனை மனிதன் அடிமை கொள்ள நினைத்த காலத்தில் இருந்தே மனித நாகரிகம் சிறைக்குள் தள்ளப்பட்டு விட்டது. நாகரிக நிலையை உலகுக்கு அளித்ததாகச் சொல்லிக்கொள்ளும் பிரெஞ்சுக்காரரும், பிரித்தானியரும் அடிமை வியாபாரிகளே! சிறையின் காவலாளிகளான இவர்கள் மனிதனுக்கு நாகரீகத்தைச் சொல்லிக் கொடுத்தவர்கள் என்பது மிகவும் வேடிக்கையானது.**

தாயரக தழைத்த காலம் போய் அன்னமிட்ட கைகளுக்கு விலங்கிட்டு பெண்ணை அடிமை கொண்ட பேடித்தனம் இன்றுவரை நீடிக்கிறது.

பெண்களை அடிக்க ஆண்களுக்கு உரிமையுண்டு என நெப்போலியன் சட்டங்கள் வலியுறுத்துகின்றன.

பெண்ணடிமைத் தனத்தை மனிதன் ஒரு விதியாக்கியதுடனேயே நாகரீகத்துக்கு ஆப்பு வைக்கப்பட்டு விட்டது. எனவே வரலாற்றை கி. பி. என்றோ கி. மு. என்றோ எழுதுவது அர்த்தம் அற்றது மனிதனின் குணம் அன்றும் இன்றும் ஒன்றே.

'நியூட்ரன்' குண்டு வந்த இந்த நாள் தான் நாகரீகத்தின் உச்சக் கட்டமென்றால் மனிதன் குகைகளுக்குள் வாழ்ந்த அக்காலம் நிச்சயம் பொற் காலமே.

மனிதன் தன் வயிற்றை வளர்க்க நிர்வாணச் சிறையில் முகம் புதைக்கின்றான்! நாகரீகத்துக்கு இதைப்போன்ற சோதனை ஒரு போதும் ஏற்பட்டதில்லை. இயந்திர மனிதர்களுடன் போட்டியிட்டு வயிறு நிரப்பும் கைதியாக மனிதன் இன்று வாழ்கின்றான்! இந்த இக்கட்டான காலத்தைவிடக் காட்டிலே வேட்டையாடி காட்டுப் பொந்திலே தேன் எடுத்து, ஆற்றங்கரையிலே தண்ணீர் குடித்து — மாந்தித் திளைத்த அந்தக் காலம் இந்தக்காலத்தை விட எந்த வகையில் கீழானது!

வயோதிபக்கைதி

வயோதிபர் ஒருவர் அனாதை விடுதியிலே 'சிறை' வாழ்க்கை வாழ்கின்றார்.

தான் பெற்ற பிள்ளைகளே தாமுண்டு, தம் பாடு உண்டு என்ற நிலையில் போய்விட அனாதை விடுதியில் இருக்கும் அந்த முதியவருக்குக் கிட்டியது விடுதலையா அல்லது ஜன்மாந்திர சிறைத்தண்டனையா? ஒரு நாள் செய்த தவறுக்காக ஆயுள் தண்டனை பெறுபவன் மனிதனே அன்றி வேறு யாரோ? அந்த ஆயுள் தண்டனையே மரண தண்டனையாகக் கல் எறியில் முடியும் சவூதியில்! நாகரீகமாக மின்சாரக் கதிரையில் வைத்துச் சாம்பலாக்குவர் அமெரிக்காவில்! மனிதா... நீ இறைவனைக் கண்டால் ஒரு வரம் கேள்.. பிறவா வரம் கேள்!!

சித்தாந்தங்களின் கைதி மனிதனே!

சித்தாந்தங்கள் மனிதனை ஆளுகின்றன. மனிதனை நிரற்படுத்திய கைதிகளாக அவை வைத்துள்ளன. மனிதர்களில் பலர் மனிதனைப் பிரிப்பதற்காக அந்த 'இஸத்'தைத் தலையிலே சுமந்தனர். கால்மாக்ஸ் எழுதுகின்றார் ''நான் ஒரு மார்க்ஸிஸ்ட் அல்ல'' என்று! அவரே அப்படிப் பகுத்தறிவுக் கலைக் கொட்டும் போது, மானிடரை நாம் கோட்பாட்டால் பிரிப்பது சரியாகுமா? பேரினவாதம் மனிதனைப் பிரித்தது. ஆட்புலப்படர்ச்சி அடிமை கொண்டது அதுவே அதுவே தோல்வியடைந்து திரும்பிக் கொண்டிருக்கிறது. பேரினவாதம் போன இடத்தில் வல்லரசும், விற்றோவும் குந்திக் கொண்டன. இப்போது மூன்றாம் உலக நாடுகள் 'விற்றோ''வின் கைதிகள்! பாவிட்டகாக இயேசு அன்று சிலுவை சுமந்தார்! கைதி நிலையில் இருக்கும் இன்றைய மானிடர்களாக இவர்கள் தான் இந்தச் சிலுவையைச் சுமப்பார்கள்!

தரம் நாடுவோர் தவறாது நாடவேண்டிய இடம்

# அண்ணா கோப்பி

இணுவில்

அன்பளிப்பு

# கவி போட்டோ

கலர்ப் படப்பிடிப்பாளர்கள்

கே. கே. எஸ். றோட், இணுவில்.

நிதான விலை! சிறந்தரகம்!!

தரமான ஜவுளிகளின் தனிப்பெரும் நிறுவனம்

# ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ

79, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்

யாழ்நகரில்!

சிறந்த வீடியோ பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கும்

புதிய, பழைய வீடியோ படங்களை பிரதிசெய்துகொள்ளவும்

(RECORDING)

எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

V

# குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

23665

செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்.

## விநாயகர் எஞ்சினியறிங்
## Vinayagar Engineering

மெக்கானிக், எலெக்றிக், கடைச்சல் போன்ற வேலைகளுக்கும்
பைப் கதிரைகள், பந்தல்கள், கேற், கிறில் போன்ற வேலைகளுக்கும்

தாங்கள் நாடவேண்டிய இடம்

# விநாயகர் எஞ்ஜினியறிங்
# VINAYAGAR ENGINEERING

உரிமையாளர்
செ. தில்லையம்பலம்
கே. கே. எஸ். வீதி, கோண்டாவில் சந்தி, கோண்டாவில்.

---

## யூனிபெக்ஸ் வீடியோ
# UNIPEX VIDEO

தரமான படப்பிடிப்பிற்க்கு தவருது நாடவேண்டிய இடம்
**யூனிபெக்ஸ் வீடியோ**

நான்கு கமராக்களைப் பொருத்தி பற்பல கோணங்களில்
படம் பிடிப்பவர்கள்
**யூனிபெக்ஸ் வீடியோ**
கோண்டாவில் வடக்கு

வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட வீடியோ மிக்ஷர் (MIX₹E)
மூலம் சிறந்தமுறையில் படம் பிடிப்பவர்கள்

## யூனிபெக்ஸ் வீடியோ
கோண்டாவில் வடக்கு

உரிமையாளர்;
S. பாலசிங்கம் S. முத்துலிங்கம்

வெள்ளிவிழாக் கொண்டாடும்
கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தை
வாழ்த்துகிறோம்.

றஞ்சனஸ் வீடியோ
**RANJANAS VIDEO**

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.